# மன் கி பாத்

பகுதி.11



# MANN KI BAAT
## VOL.11

**Illustrations and Cover Art**
Dilip Kadam

**Assistant Artist**
Ravindra Mokate

**Production**
Amar Chitra Katha

**Colourists**
Prakash Sivan, Prajeesh V. P. and M. P. Rageeven

**Layout Artist**
Akshay Khadilkar

**Published by**
Amar Chitra Katha Pvt. Ltd

**TAMIL**

ISBN – 978-93-6127-315-5

Amar Chitra Katha Pvt. Ltd, February 2024

© Ministry of Culture, Govt of India, February 2024
All rights reserved. This book is sold subject to the condition that the publication may not be reproduced, stored in a retrieval system (including but not limited to computers, disks, external drives, electronic or digital devices, e-readers, websites), or transmitted in any form or by any means (including but not limited to cyclostyling, photocopying, docutech or other reprographic reproductions, mechanical, recording, electronic, digital versions) without the prior written permission of the publisher, nor be otherwise circulated in any form of binding or cover other than that in which it is published and without a similar condition being imposed on the subsequent purchaser.

You can now get ACK stories as part of your classroom with **ACK Learn**, a unique learning platform that brings these stories to your school with a range of workshops. Find out more at **www.acklearn.com** or write to us at **acklearn@ack-media.com**.



என் அன்பான குழந்தைகளே,

நமது கலாச்சாரம் எப்போதும் “மாதா, பிதா, குரு, தெய்வம்” என்ற பழமொழியை நம்புகிறது.

என்.கே.ஹேமலதா என்ற தமிழ் ஆசிரியை இதை அப்படியே வாழ்ந்து காட்டியவர். கோவிட் -19 பேண்டமிக்கின் போது, பள்ளிகள் இயங்காத நிலையில், ஹேமலதா அவர்கள் பாடங்களின் அனிமேஷன் வீடியோக்களை உருவாக்கி தனது மாணவர்களுக்கு கொடுத்தார்.

சந்தாலி பேராசிரியரான ஸ்ரீபதி துடுவும் பல மாத ஆராய்ச்சிக்குப் பிறகு, நமது அரசியலமைப்பை சந்தாலியில் மொழிபெயர்த்தார். இப்போது, பல சந்தால் மக்கள் தங்கள் உரிமைகளைப் பற்றி படிக்க முடியும் - ஒவ்வொரு இந்திய குடிமகனும் இதைச் செய்ய வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

இருப்பினும், ஒரு சிறந்த ஆசிரியர் எப்போதும் வகுப்பறையில் காணப்படுவதில்லை.

ரோகன் கலைஞரான அப்துல் கஃபர் காத்ரி, 200 க்கும் மேற்பட்ட சிறுமிகளுக்கு இந்த பண்டைய துணி ஓவியத்தை பயிற்சி அளித்துள்ளார், இது வரலாற்று ரீதியாக ஆண் ஆதிக்கம் செலுத்தும் துறையில் அவர்களுக்கு இடம் அளித்துள்ளது. இதேபோல், நாகாலாந்தின் லிடி க்ரூ சொசைட்டி, அடுத்த தலைமுறைக்கான பட்டறைகளை நடத்துவதன் மூலம் நாகா மரபுகள் அழியாமல் இருப்பதற்கான நோக்கமாக உள்ளது.

காந்திஜி சொன்னது போல், “ஒரு சுடரில் இருந்து ஆயிரம் மெழுகுவர்த்திகள் ஏற்ற முடியும்.” ஆர்வத்துடன் கற்றுக் கொள்ளுங்கள், தாராளமாக கற்பியுங்கள். நீங்கள் வேறொருவரின் மெழுகுவர்த்தியை ஏற்றினால், அது மாற்றத்திற்கு வழிவகுக்கும் ஜோதியாக மாறும்.



# உள்ளடக்கங்கள்


| | | |
|---|---|---|
| 1 | அப்துல் காஃபூர் கத்ரி | 3 |
| 2 | பாண்டு தோத்ரே | 6 |
| 3 | தைதாரி நாயக் | 9 |
| 4 | லிடி க்ரூ சொசைட்டி | 12 |
| 5 | மார்டினா தேவி | 15 |
| 6 | என்.கே.ஹேமலதா | 17 |
| 7 | மா சரஸ்வதி சுயஉதவி குழு | 19 |
| 8 | ஸ்மார்ட் காவ் | 22 |
| 9 | சோனாலி ஹெல்வி | 25 |
| 10 | ஸ்ரீபதி துடு | 28 |
| 11 | யுவா பிரிகேட் | 31 |

# அப்துல் காஃபூர் கத்ரி




விரைவில், அப்துல் கூட வேலைக்காக நகரத்திற்கு செல்ல வேண்டியிருந்தது. சிறிது காலம் அகமதாபாத்திலும் பின்னர் மும்பையிலும் வாழ்ந்தார்.
கட்ச் மாவட்டத்தில் வறட்சி மேலும் தீவிரமடைந்து வருகிறது. தினக்கூலிகளுக்கு வேலை இல்லை. என் குடும்பம் எப்படி பிழைக்கும்?
1980களின் பிற்பகுதியில், குஜராத் அரசிடமிருந்து ரோகன் கலைப்படைப்புகளுக்கான ஆர்டர் வந்தது. அப்துல் வீடு திரும்பி குடும்பத்துடன் வேலை செய்ய முடிவு செய்தார்.
ரொம்ப நாளாகிவிட்டது. அப்துல், ரோகன் திறமைகளை நீ மீண்டும் கற்றுக் கொள்ள வேண்டும்.
ஆமாம் அப்பு. எனது வாழ்க்கையை நம் கலைக்காக அர்ப்பணிக்க உள்ளேன், அதை உயிர்ப்பிக்க வேண்டியவற்றை செய்ய முடிவு செய்துள்ளேன்.
இன்றைய உலகிற்கு ஏற்ப ரோகனைப் பொருத்தமாக வைத்திருக்க நான் ஒரு வழியைக் கண்டு பிடிக்க வேண்டும்.
முன்னதாக, உள்ளூர் சமூகங்கள் நம் துணிகளை ஆடை மற்றும் பிற பயன்பாட்டிற்காக வாங்குவார்கள், ஆனால், இப்போது இயந்திரத்தால் செய்யப்பட்ட துணி அதை மாற்றியுள்ளது. இப்போது நமது பொருட்களை வாங்கும் புதிய சந்தையை நாம் கண்டுபிடிக்க வேண்டும்.
சரியாகச் சொன்னாய் அப்துல்.
விரைவில், அப்துல் பாரம்பரிய ரோகன் டிசைன்களை பைகள், பெட்ஷீட்கள், ஜாக்கெட்டுகள், குர்தாக்கள் மற்றும் சுவரில் மாட்டப்படும் அழகு பொருட்கள் பலவற்றை மீண்டும் கண்டுபிடித்தார்.


புதிய பொருட்கள் விற்பனையாகின்றன! சுற்றுலாப் பயணிகள் வணிகத்தை பெரிய அளவில் புத்துயிர் தந்துள்ளனர்.
விரைவில், கத்ரி குடும்பத்தினர் கலை வடிவில் அதிக ஆர்வத்தை உருவாக்க சுற்றுலாப் பயணிகளுடன் செயல்விளக்கப் பட்டறைகள் மற்றும் ‘கேள்வி பதில்’ அமர்வுகளை நடத்தத் தொடங்கினர்.
இன்று, கத்ரி குடும்பம் ஒவ்வொரு நாளும் ரோகன் கலையைப் பற்றி அறிய ஆர்வமாக உள்ள 150 க்கும் மேற்பட்ட பார்வையாளர்களை சந்திக்கின்றனர்.
அப்துல் நம் கைவினைப் பொருளை கலை நிலைக்கு உயர்த்தியுள்ளார். மக்கள் மீண்டும் நம்மை கவனிக்கிறார்கள்.
தனது கலைப் படைப்புகளுக்கு அதிகரித்து வரும் தேவையை பூர்த்தி செய்ய, அப்துல் தனது கிராமத்தைச் சேர்ந்த 200க்கும் மேற்பட்ட சிறுமிகளுக்கு பயிற்சி அளிக்கத் தொடங்கினார். பாரம்பரியமாக ஆண் ஆதிக்கம் செலுத்தும் துறையில் இது ஒரு மகத்தான வெற்றிப்படியாகும்.
நாங்கள் உங்கள் வயதில் இருந்தபோது என்னையும் என் சகோதரர்களையும் விட பெண்களான உங்களுக்கு பொறுமை அதிகம். ஹா ஹா!
2014 ஆம் ஆண்டில், பிரதமர் நரேந்திர மோடி, அமெரிக்காவின் அப்போதைய ஜனாதிபதி பராக் ஒபாமாவுக்கு, வாழ்க்கை பாடத்தை சித்தரிக்கும் அப்துலின் ரோகன் ஓவியங்களில் ஒன்றை பரிசாக வழங்கியபோது, கலை அதன் முக்கியத்துவத்தின் உச்சத்தை எட்டியது.
ரோகன் கலையை ஒற்றைக் கையால் புதுப்பித்ததற்காக, அப்துல் 2019 ஆம் ஆண்டில் பத்மஸ்ரீ விருது பெற்றார்.
கத்ரி குடும்பத்தைச் சேர்ந்த பலர் தேசிய விருதுகளையும் பெற்றுள்ளனர். அப்துல் அவரது அர்ப்பணிப்பு மற்றும் புதுமைக்காக மன் கி பாத் நிகழ்ச்சியில் பிரதமர் மோடியால் சிறப்பாகப் பாராட்டப்பட்டார்.

# பாண்டு தோத்ரே



மாணவர்கள் விவாதத்தின் நடுவே இருந்தனர்.
தாஜ்மஹால் முன்பு வெள்ளை நிறத்தில் இருந்ததாகப் படித்திருக்கிறேன். பல ஆண்டுகளாக ஏற்பட்ட மாசுபாடு தற்போது மங்கலான மஞ்சள் நிறமாக மாறியுள்ளது.
ஆனால், இந்த சேதங்களை சரிசெய்யவோ அல்லது நினைவுச்சின்னத்தை மீண்டும் கட்டவோ முடியாது. செய்ய ஒன்றுமில்லை.
பூஜா,அது உண்மை இல்லை. நினைவுச் சின்னங்களை நம்மால் மீண்டும் கட்ட முடியாது, ஆனால், அவற்றை மீட்டெடுக்கவும் பாதுகாக்கவும் முடியும். மகாராஷ்டிராவில் ஒரு தன்னார்வ தொண்டு நிறுவனம் பல நூற்றாண்டுகள் பழமையான கோட்டையை சுத்தம் செய்து மீட்டுள்ளது.
மகாராஷ்டிர மாநிலம் சந்திரபூரைச் சேர்ந்த பாண்டு தோத்ரே, தனது தாய்நாட்டின் மீதும் இயற்கையின் மீதும் அளவற்ற அன்பு கொண்டிருந்தார்.
இவ்வளவு தொழில் வளர்ச்சியால் இயற்கையை மிகவும் சீர்குலைத்து வருகிறோம்.
TIGER ATTACKS MAN
மாவட்டத்தின் மூன்றில் ஒரு பகுதி காடுகளின் கீழ் உள்ளது, எனவே மனிதர்கள் காட்டு விலங்குகளை சந்திப்பது ஒரு பொதுவான நிகழ்வாகும்.
பேரிடர் மேலாண்மையில் பயிற்சி பெற்ற அவர், இப்பகுதி எதிர்கொள்ளும் பல்வேறு சமூக மற்றும் இயற்கைப் பிரச்சனைகள் குறித்து ஆழ்ந்த கவலையில் இருந்தார்.
எனது நிபுணத்துவத்தை நான் நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும் மற்றும் சில தன்னார்வலர்களுக்கு இதுபோன்ற அவசரநிலைகளுக்கான பயிற்சி அளிக்க வேண்டும்.




*மராத்தியில் சகோதரி

^மராத்தியில் சகோதரன்


ECO-PRO வால் ஏற்றுக்கொள்ளப்பட்ட திட்டங்களில் ஒன்று சந்தா கோட்டையை சுத்தம் செய்து மீட்டமைத்தல் ஆகும்.
இது ஒரு பெரிய பணி, ஆனால், இந்த கோட்டை சந்திராபூரின் பெருமை.
ஆமாம், அது மீண்டும் சுத்தமாகும் வரை நாம் நிறுத்த கூடாது..
இதனால், பத்து பேர் கொண்ட ECO-PRO குழுவினர் கோட்டையை சுத்தம் செய்யத் தொடங்கினர்.
ஒவ்வொரு வார இறுதி மற்றும் விடுமுறை நாட்களிலும், மற்ற தன்னார்வலர்களும் அணியில் சேருவார்கள்.
இன்று என் கடை மூடப்பட்டுள்ளது, என் மகனுக்கும் பள்ளி இல்லை. நாங்கள் உங்களுடன் சேரலாமா?
நிச்சயம்!
அனைத்து தரப்பு மக்களும் கோட்டையை மீட்க ECO-PRO வின் முயற்சியில் இணைந்தனர்.
200 நாட்கள் தொடர்ச்சியான பணிக்குப் பிறகு, கோட்டையின் பெரும்பாலான பகுதிகள் சுத்தம் செய்யப்பட்டன.
நாம் வெகுதூரம் வந்துவிட்டோம். நமக்கு உதவிய அனைத்து குடிமக்களையும் நினைத்து நான் மிகவும் பெருமைப் படுகிறேன்.
ஆமாம்!
ECO-PRO வின் சாதனையை பிரதமரும் பாராட்டினார்.
கோட்டைகள் நமது பாரம் பரியத்தின் சின்னங்கள். அது நமது வரலாற்று பாரம்பரியத்தை பாதுகாப்பாக வும் சுத்தமாகவும் வைத்திருப்பது அனைத்து நாட்டு மக்களின் கடமை. சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்புக்கும், அவர்களின் ஒட்டுமொத்த குழுவிற்கும், சந்திராபூர் மக்களுக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# தைதாரி நாயக்



உங்!
ஆர்க்!
இது மிகவும் கடினம்!
நான்கு வருடங்களாக தினமும் இதை செய்த தைதாரி நாயக் பற்றி சொல்கிறேன். அவர் பாறைகளைத் தோண்டினார், உங்களைப் போல மென்மை யான நிலத்தை அல்ல. அவர் சாதித்தது நம்ப முடியாதது.
ஒடிசாவின் கியோஞ்சர் மாவட்டத்தில் உள்ள தலபைதரணி என்ற பாறை மற்றும் வறண்ட கிராமத்தில் தைதாரி நாயக் வசித்து வந்தார்.
வாழ்க்கை மிகவும் கடினமாகி வருகிறது. இங்கு எதுவும் வளரவில்லை, மக்கள் கிராமத்தை விட்டு வெளியேறு கிறார்கள்.
அவர்களால் என்ன செய்ய முடியும்? இங்கு தண்ணீர் இல்லை. மழை பெய்தால் மட்டுமே பயிர்கள் வளர்ந்து, விற்பனைக்கு போகும்.
அந்த மலைகளுக்குப் பின்னால் தண்ணீர் ஆர்ப்பரிப்பதை நான் கேட்கிறேன், ஆனால், ஒரு துளி கூட இங்கு வரவில்லை.
குப்த் பைதரணி ஆறு தைதாரியின் கிராமத்திற்குப் பின்னால் உள்ள கோனாசிகா மலை வழியாக பாய்கிறது.
அந்தத் தண்ணீரை இங்கு வரச் செய்ய ஏதாவது வழி இருந்தால், நம் வாழ்க்கை எளிதாகி விடும்.
ஹா ஹா! நீங்கள் ஒரு பொறியாளராக இருந்திருக்க வேண்டும், ஒரு விவசாயியாக அல்ல.


அது ஒரு கனவாக இருக்கும்.
ஆனால், கனவு காண்பதில் அர்த்தமில்லை, தைதாரி.
ம்ம்ம்.
1996 ஆம் ஆண்டில் ஒரு நாள் அதிகாலையில், தைதாரி ஒரு இரும்பு கம்பியையும் ஒரு மண்வெட்டியையும் எடுத்தார்.
எங்கே போறீங்க?
... மற்றும் மலையை நோக்கி புறப்பட்டார்.
அவர் மலையில் ஒரு ஓடையை அடைந்தபோது -
டங்க் டங்க்!
அடுத்த நாள் காலை -
நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்? நீங்கள் நேற்று முழுவதும் இங்கே இருந் திருக்கிறீர்கள். என்னால் எந்த மாற்றத்தையும் பார்க்க முடிய வில்லை.
இந்த தண்ணீர் நம் கிராமத்திற்கு செல்லும் வகையில் கால்வாய் அமைக்க வேண்டும். அது நடக்கும் வரை தோண்டிக்கொண்டே இருப்பேன்.
அதன் பிறகு தினமும் மலையைத் தோண்டி எடுத்தார் தைதாரி.
டங்க் டங்க்!
கிராம மக்களுக்கு இது வேடிக்கையான காட்சியாக இருந்தது.


ஆனால், சிறிது காலம் கழித்து -
அவரைப் பார்த்து நேரத்தை வீணாக்குவதற்குப் பதிலாக, என்னால் அவருக்கு உதவ முடியும்.
விரைவில், மற்ற கிராம மக்களும் தங்களால் முடிந்த போதெல்லாம் சேர்ந்து கொண்டனர்.
மெல்ல, பாறைகள் வழி கொடுக்க ஆரம்பித்தன. நான்கு நீண்ட ஆண்டுகளாக, தைதாரி ஆற்றில் இருந்து கீழ்நோக்கி தோராயமான, மூன்று கிலோமீட்டர் நீளமுள்ள கால்வாயை தோண்டினார்.
தண்ணீர்! நம்மிடம் தண்ணீர் இருக்கிறது!
தைதாரி தூர்வாரப்பட்ட கால்வாயால், 100 ஏக்கர் தலைபைதரணி பாசனம் பெறுகிறது. ஒரு வருடத்தில் கிராம மக்களின் வாழ்க்கையே மாறியது.
இப்போது நாம் ஆண்டு முழுவதும் பயிர் செய்யலாம்.
நம்மால் கூடுதலான பயிர்களை விற்க முடியும். நம் குழந்தைகளைப் படிக்க வைக்க பணம் இருக்கிறது.
இப்போது 'ஒடிசாவின் கால்வாய் நாயகன்' என்று அழைக்கப்படும் தைதாரிக்கு 2019ஆம் ஆண்டில் பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டது. மன் கி பாத் நிகழ்ச்சியிலும் அவர் பாராட்டப்பட்டார்.
ஆனால், தைதாரிக்கு ஒரு கோரிக்கை இருக்கிறது.
கால்வாய் தூர்வாரப்பட்டாலும், அதை பராமரிக்க வேண்டும். சிமெண்ட் மூலம் அதை அரசு வலுப்படுத்தினால், அது பெரிய உதவியாக இருக்கும்.

# லிடி க்ரூ சொசைட்டி



இது மிகவும் சுவையாக இருக்கு.! அது என்ன?
அதன் பெயர் என்னவென்று எனக்குத் தெரியாது. என் பாட்டிக்கு மட்டுமே அதை எப்படி செய்வது என்று தெரியும்.
நீங்கள் செய்முறையை முயற்சி செய்து கற்றுக்கொள்ள வேண்டும்.
நமது கலாச்சாரத்தை உயிர்ப்புடன் வைத்திருக்க சிறந்த வழி அதைக் கற்றுக்கொள்வதும் நடைமுறைப் படுத்துவதும்தான். கோஹிமாவில் உள்ள ஒரு குழுவினர் இளைஞர்களிடையே நாகா கலாச்சாரத்தை ஊக்குவித்து வருகின்றனர்.
2012ஆம் ஆண்டில், கோஹிமாவில் -
நம் குழந்தைகளுக்கு நம்முடைய கலாச்சாரத்துடன் எந்த தொடர்பும் இல்லை.
ஆமாம், என் குழந்தைகளுக்கு பாரம்பரிய உடைகள், இசை அல்லது உணவில் விருப்பமில்லை.
இவற்றை யாரும் கற்றுக் கொள்ளவில்லை என்றால், நமது கலாச்சாரம் மெல்ல அழிந்துவிடும்.
அதை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்ல நாம் ஏதாவது செய்ய வேண்டும்.


தங்கள் கலாச்சாரத்தை அழிந்து போகாமல் காப்பாற்றும் முயற்சியில், பெண்கள் குழு லிடி க்ரூ சொசைட்டியைத் தொடங்கியது.
LIDI KROU SOCIETY KOHIMA
சங்கத்தின் பெரும்பாலான உறுப்பினர்கள் தாய்மார்கள், அவர்கள் ஒரு பாடகர் குழுவின் ஒரு பகுதியாக இருந்தனர்.
நாகார்களின் பாரம்பரிய வழிகளைப் பற்றி மேலும் அறிய ஆர்வமுள்ள மக்களுக்காக அவர்கள் பட்டறைகள் மற்றும் வகுப்புகளை நடத்தினார்கள்.
அரிசியை எப்படிப் போடுகிறோம் என்பதைக் காட்டு கிறேன்.
...அவர்களின் உணவுகளை சமைப்பது...
இப்போது மூங்கிலுக்குள் வைத்து சமைப்பதற்கு மீன் தயாராக உள்ளது.
நான் ஒரு முறை சாப்பிட்டேன், அது மிகவும் சுவையாக இருந்தது!
அவர்களின் இசை...
இந்தப் பாடல்களைப் பதிவு செய்து அதைக் கொண்டு ஒரு ஆல்பத்தை உருவாக்குவோம்.
சிறந்த யோசனை!
அவர்களின் நடனங்கள்...
அவர்கள் இந்த குழந்தைகளுக்கு நன்றாக பயிற்சி அளித்துள்ளனர்.
உண்மை. நம் நாட்டுப்புற நடனத்தின் இவ்வளவு அழகை நான் சிறுவயதில் இருந்து பார்த்ததில்லை.




*ஒரு பாரம்பரிய நாகா ஆடை, பொதுவாக பாவாடையாக அணியப்படும்

# மார்டினா தேவி


ஸ்ரேயாஸ் மோசமான மனநிலையில் இருந்தான்.
பெரும்பாலான நாற்காலிகளை மைதானத்தில் இருந்து ஹாலுக்கு கொண்டு சென்றவன் நான் தான், விளையாட்டு சார் அந்த பத்தாம் வகுப்பு மகேஷுக்கு மட்டும் நன்றி சொல்லிக் கொண்டிருந்தார்.
ஸ்ரேயாஸ், உனக்கு தெரியாது, நீ ஒரு பளு தூக்கும் வீரராகலாம்,.


நாற்காலிகளைத் தூக்குவதன் மூலமா?!
ஹஹஹா! என் கதையைக் கேளுங்கள், நான் என்ன சொல்கிறேன் என்பதை நீங்கள் புரிந்துகொள்வீர்கள்.


2016 ஆம் ஆண்டில், மணிப்பூரின் தொலைதூர கிராமத்தில் -
பாருங்கள், அப்பா! மணிப்பூரை சேர்ந்தவர் குஞ்சுராணி. நான் அவர்களை போல் பளு தூக்கும் வீராங்கனையாக மாற விரும்புகிறேன்.
மேலும், வெற்றி பெற்றவர் மணிப்பூரை சேர்ந்த குஞ்சுராணி தேவி!
பத்து வயது மார்ட்டினா, இந்திய சாம்பியன் பளுதூக்கும் வீராங்கனை குஞ்சுராணி தேவியின் நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.


ஆமாம் உன்னால் முடியும்! நீ கடினமாக உழைக்க வேண்டும்.
எனக்காக தினமும் கனமான வாளிகளில் தண்ணீர் எடுத்துச் செல்ல வேண்டாமா? நீ என் வலிமையான பெண்.


மார்டினாவிற்கு, அவள் மீது அவளுடைய பெற்றோரின் நம்பிக்கை போதுமானதாக இருந்தது. அந்த ஆண்டு டிசம்பரில் அவள் பயிற்சியைத் தொடங்கினாள்.
இந்த பெண் நிறைய திறனை வெளிப்படுத்து கிறாள்.
ஆமாம், அவளும் விளையாட்டிற்காக அர்ப்பணிக்கப் பட்டவள்.
அந்த அர்ப்பணிப்பு, லக்னோவில் உள்ள இந்திய விளையாட்டு ஆணையத்தில் (SAI) ஆதரவு மற்றும் பயிற்சியுடன் பல வெற்றிகளுக்கு வழிவகுத்தது.
2022 ஆம் ஆண்டில் மட்டும் பளு தூக்குதலில் 39 சாதனைகளை படைத்துள்ளீர்கள். நீங்கள் சாதிக்க ஏதாவது பாக்கி இருக்கிறதா?
நிச்சயமாக! நான் உலக அரங்கில் செல்ல நீண்ட தூரம் உள்ளது, ஆனால் என்னால் அதை செய்ய முடியும் என்று எனக்குத் தெரியும்.
எனவே, அடுத்து என்னது?
அது உலக இளைஞர் சாம்பியன்ஷிப் மற்றும் ஒலிம்பிக் ஆகும்.
மார்டினாவின் தன்னம்பிக்கை அவரது சொந்த அறிக்கையில் எதிரொலிக்கிறது.
நான் எப்போதும் முன்பை விட சிறப்பாக செயல்படுவேன் என்று எனக்குத் தெரியும்.
அவரது சாதனைகளை பிரதமர் மோடி தனது வானொலி நிகழ்ச்சியில் பாராட்டியதே மார்ட்டினாவின் வெற்றிக்கு போதுமான சான்று.

# என்.கே.ஹேமலதா




* எஸ் எஸ் எல் சி அதாவது செகண்டரி ஸ்கூல் லீவிங் செர்டிபிகட், 10 ஆம் வகுப்புத் தேர்வுகள் என்றும் அழைக்கப்படுகிறது

^தமிழ்நாட்டில் உள்ள ஒரு மாவட்டம்




*சரியான வாழ்க்கை மற்றும் சரியான சிந்தனை பற்றிய தமிழ் ஜோடிகளின் தொகுப்பு

# மா சரஸ்வதி சுயஉதவிக் குழு




** உத்தரபிரதேசத்தில் உள்ள மாவட்டம்*

*^ஒரு வாழை மரம் ஒரே ஒரு முறை காய்க்கும். அதன் பிறகு, தண்டு வெட்டப்பட்டு, புதிய தளிர்கள் புதிய செடியாக வளர அனுமதிக்கப்படும்.*


ஒரு நாள், லக்கிம்பூர் கேரியின் தலைமை வளர்ச்சி அதிகாரியான அரவிந்த் சிங், இசாநகரின் சமைசா கிராமத்திற்குச் சென்று விவசாயிகளைச் சந்தித்தார்.
இந்த வாழைத் தண்டுகளை என்ன செய்வீர்கள்?
நாங்கள் அவற்றை அகற்றி விடுவோம்.


நாங்கள் அதை ஏதாவது செய்ய விரும்புகிறோம், ஆனால், என்ன செய்வது என்று எங்களுக்குத் தெரியவில்லை. நல்ல வாழைத்தண்டுகள் வீணாகப் போவதை நாங்கள் விரும்பவில்லை.
ம்ம்... என்ன செய்யலாம்னு பார்க்கிறேன்.
மா சரஸ்வதி என்ற சுயஉதவிக் குழுவின் தலைவி பூனம் தேவி பேசினார்.


அரவிந்த் விரைவில் பிரச்சனைக்கு பயனுள்ள தீர்வுகளைத் தேடத் தொடங்கினார். ஒரு நாள் -
இதுதான் என்று நினைக்கிறேன். எனக்கு கிடைத்து விட்டது!


அரவிந்த் பூனம் தேவி மற்றும் அவரது குழுவை அணுகினார்.
வாழைத்தண்டிலிருந்து நாரை எடுக்கலாம். வாழை நார் துணிகள், பைகள் மற்றும் பல பொருட்களை தயாரிப்பதில் பயன்படுத்தப்படுகிறது. என்னால் உங்கள் கிராமத்தில் இதை பிரித்தெடுக்கும் யூனிட்டை அமைக்க முடியும். நார் பிரித்தெடுக்கும் பணியை மேற்கொள்வீர்களா?
நிச்சயமாக, சார். அது நமக்கு வருமானம் தருவதோடு, தண்டுகளையும் நல்ல பயன்பாட்டிற்கு கொண்டு வரும்.


அரவிந்த் விரைவில் உபகரணங்களை வாங்கி சமைசாவில் அமைத்தார்.
அதை எவ்வாறு பயன் படுத்துவது என்பதைப் புரிந்து கொள்ள, நீங்கள் ஆன்லைன் பயிற்சியை மேற்கொள்ள வேண்டும்.
நான் கற்றுக் கொள்வேன் மற்றும் மற்ற பெண்களுக்கும் பயிற்சி பெற உதவுவேன். உடனடியாக பணியை தொடங்குவோம்.
சில வாரங்கள் கழித்து -
இது உலர்ந்த மற்றும் பிரிக்கப்பட்ட நார்.
இது சிறப்பானது. சோதனை மற்றும் பயன்பாட்டிற்காக நிறுவனங்களுக்கு அனுப்புகிறேன், யாராவது அதை வாங்க விரும்பலாம்.
ஜூன் 2021 ஆம் ஆண்டில் -
பூனம் அக்கா, இந்த கடிதம் மா சரஸ்வதி குழுவிற்கு வந்துள்ளது.
இது நல்ல செய்தி என்று நம்பு கிறேன்!
அது நிச்சயமாக -
குஜராத்தைச் சேர்ந்த ALTMAT என்ற நிறுவனத்திற்கு 200 கிலோ வாழை நார் தேவையாம். நமக்கு 21,000 ரூபாய் டோக்கன் கொடுக்க கூட தயாராக இருக்கிறார்கள்.
ஆச்சரியமாக இருக்கிறது!
இன்று, குழுவின் 40 பெண் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் ஒரு நாளைக்கு நான்கு முதல் ஆறு கிலோ வரை நாரை எடுக்கிறார்கள்.
தினமும் ரூ.400 முதல் ரூ.600 வரை சம்பாதிக்கிறோம். இந்த முயற்சி நமக்கு பெரும் வாழ்வாதார வாய்ப்பை வழங்கியுள்ளது.
அதிக நிறுவனங்கள் நாரை வாங்க வேண்டும் என்று பெண்கள் நம்புகிறார்கள். இது அவர்களின் வருமானத்தை அதிகரிப்பது மட்டுமல்லாமல், மிகப்பெரிய விவசாய கழிவுகளை கையாளவும் உதவும்.

# ஸ்மார்ட் காவ்




*அமெரிக்காவின் கலிஃபோர்னியாவில் உள்ள நகரம்

^சான் ஜோஸில் உள்ள உள் அரங்கம்




*உத்திரபிரதேச மாநிலம் ரேபரேலி மாவட்டத்தில் உள்ள கிராமம்

^கிராமத் தலைவர்


அடுத்த ஆண்டில், கிராமத்தில் இணையச் சேவை, தெரு விளக்குகள், கழிப்பறைகள், சிறந்த மின்சாரம் மற்றும் சிறந்த சுகாதார சேவைகள் ஆகியவற்றைப் பெற்றனர்.
இணையத்தைப் பயன்படுத்த விரும்பும் எல்லோருக்கும் இது புதிய வைஃபை மண்டலமாகும்.
நம்முடைய கிராமம் முற்றிலும் மாறிவிட்டது. உங்கள் பணிக்கு என்னால் போதுமான நன்றி சொல்ல முடியாது.
இருப்பினும் இருவரின் பணி முடியவில்லை. அவர்கள் விரைவில் கிராமத்தில் உள்ள விவசாயிகளை ஒரு திட்டத்துடன் சந்தித்தனர்.
எங்கள் பயன்பாட்டில், கிராம் மார்ட் அம்சம் உள்ளது. நீங்கள் விற்க விரும்பும் பொருட்களைப் பற்றிய தகவலை நீங்கள் இதில் வைக்கலாம். அதை அருகில் உள்ள கிராமங்களில் உள்ள வர்கள் பார்த்து ஆர்டர் கொடுப்பார்கள்.
இதன் பொருள் எந்த தரகரும் இல்லை.
மற்றும் வருமானம் அதிகரிக்கும் என்று நம்பு கிறேன்!
ரஜ்னிஷ் மற்றும் யோகேஷ் கிராமத்தில் உள்ள பெண்களின் வருமானத்தை மேம்படுத்தும் திட்டத்தையும் வைத்திருந்தனர்.
செயலியில் வணிக வாய்ப்பு என்ற அம்சம் உள்ளது. உங்கள் தயாரிப்புகளில் ஏதேனும் ஒன்றை நீங்கள் விற்க விரும்பினால், அதை பயன்பாட்டின் மூலம் செய்யலாம்.
நீங்கள் எங்கள் பயிற்சியில் கலந்து கொண்ட பிறகு நாங்கள் உங்களை மக்களுடன் இணைத்து உங்கள் படைப்புகளை விற்று உங்கள் வருமானத்தை அதிகரிக்க உதவுவோம்.
அடுத்த சில ஆண்டுகளில், ரஜ்னிஷ் மற்றும் யோகேஷ் தௌதக்பூரின் வெற்றியை மற்ற 14 கிராமங்களில் பிரதிபலித்தனர்.
உறுதியாக இருங்கள். உங்கள் கிராமத்தில் விரைவில் சுத்தமான குடிநீர் கிடைக்கும்.
எங்களுக்கு உங்கள் ஆதரவு மட்டுமே தேவை.
இன்று, ரஜ்னிஷ் மற்றும் யோகேஷ் 20 க்கும் மேற்பட்ட கிராமங்களில் பணிபுரிகின்றனர், மேலும் அவர்களுடன் இணைந்து சுமார் 22 ஸ்டார்ட்-அப்களைக் கொண்டுள்ளனர்.
காலப்போக்கில், நாட்டின் ஒவ்வொரு கிராமத்தையும் அடைந்து, அவை அனைத்தையும் ஸ்மார்ட் கிராமங்களாக மாற்ற விரும்பு கிறோம்.
ஸ்மார்ட் காவ் முயற்சியானது காலப்போக்கில் பிரபலமடைந்து, பிரதமர் மோடியின் மன் கி பாத் நிகழ்ச்சியிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சோனாலி ஹெல்வி




*சிக்கலான கணக்கீடுகளை விரைவாகச் செய்யப் பயன்படும் சாதனம்
















* வரிசையாக அமர்ந்திருக்கும் சேசர்கள் மற்றும் டிஃபண்டர்கள் விளையாடும் பாரம்பரிய இந்திய விளையாட்டு

^மராத்தியில் அம்மா

** ரெய்டிங் மற்றும் டிஃபெண்டிங் அணிகளைக் கொண்ட பாரம்பரிய இந்திய விளையாட்டு



பெரிய வெற்றிக்குப் பிறகு, சோனாலி தனது குடும்பத்தினரிடம் இதை சொல்ல வேண்டிய நேரம் என்று நினைத்தாள்.
பாருங்கள் அம்மா! தேசிய அளவிலான கபடி ஜூனியர் போட்டியில் தங்கப் பதக்கம் வென்றேன்.
நீ கபடி விளையாடி இருக்கிறீயா?
ஜூனியர் நேஷனல்ஸ்?
நீங்கள் இருவரும் நான் படித்து வேலை வாங்க வேண்டும் என்று விரும்புகிறீர்கள் என்று எனக்குத் தெரியும், ஆனால் அது என் வழி இல்லை. நான் கபடியை தொடர விரும்புகிறேன்.
நீ உன் மனதை உறுதியாக வைத்திருக்கிறாய். உன் ஆர்வத்திற்கு இனி நாங்கள் தடையாக இருக்க மாட்டோம்.
எனக்கு ஒரு மன உறுதியான தங்கை இருக்கிறாள்! ஆனால், நீ இன்று எங்களையெல்லாம் பெருமைப்படுத்தி யுள்ளாய்!
அன்றிலிருந்து திரும்பிப் பார்க்கவே இல்லை.
சோனாலி உன்னை இன்னும் தள்ளு, நீ பெரிய உயரத்தை அடைவாய்.
தீவிர பயிற்சியில் ஈடுபட்ட சோனாலி, 2008ல் மகாராஷ்டிர அணியின் கேப்டனானார்.
இன்று, சோனாலி தனது ஆக்ரோஷமான ரெய்டிங் ஸ்டைலுக்காகவும், சிறந்த ஆல்ரவுண்டராகவும் அறியப்படுகிறார். அவள் தனது கல்வியையும் வேலையையும் சமநிலைப்படுத்தும் அதே வேளையில் தன் ஆர்வத்தைப் பின்பற்றுகிறாள்.
அவரது ஆர்வத்தையும் உறுதியையும் பிரதமர் மோடி தனது வானொலி நிகழ்ச்சியான மன் கி பாத் மூலம் கொண்டாடினார்.
அவரது குடும்பத்தினர் மற்றும் சமூகத்தில் இருந்து சில எதிர்ப்புகள் இருந்தபோதிலும், சோனாலி ஒரு விருப்பம் உள்ள இடத்தில், உண்மையில் ஒரு வழி இருக்கிறது என்பதை நிரூபித்துள்ளார்!
இப்போது, சோனாலி தனது கனவுகளை இந்திய தேசிய அணியில் தேர்வு செய்வது போன்ற உயர்ந்த இலக்குகளில் வைத்துள்ளார்.

# ஸ்ரீபதி துடு




*பங்களாதேஷ் மற்றும் நேபாளத்திலும் இப்பகுதியை பூர்வீகமாகக் கொண்ட ஒரு பழங்குடி காணப்படுகிறது
^சந்தாலி மொழிக்கான எழுத்தின் பெயர்




* மிகவும் சிக்கலான வேலை




*"இந்திய மக்களாகிய நாம், அமைப்பதற்கு உறுதியாக தீர்மானித்துள்ளோம்...."
இது முன்னுரையின் முதல் வாக்கியம்.

# யுவா பிரிகேட்




*இளைஞர் குழு


அவர்கள் அனைவருக்கும் வேலையில் இருந்ததால், யுவா பிரிகேட் சேர்ந்தவர்கள் வார இறுதி நாட்களில் கோயிலில் வேலை செய்தனர்.
அடடா, இந்த சுரங்கப்பாதையில் சேறு நிறைந்திருக் கிறது.
கவனி! பாம்பு!
மனம் தளராமல், சுத்தம் செய்யும் பணியை தொடர்ந்தனர்.
மெல்ல, கோயிலின் அழகு தெரிய ஆரம்பித்தது.
இந்த சிற்பங்கள் அனைத்தும் மிகவும் சிக்கலானவை.
இதை நான் சமூக வலைதளங்களில் பதிவிடப் போகிறேன்... ஒருவேளை மற்றவர்கள் நம்முடன் சேரலாம்.
விரைவில் -
உங்கள் பதிவைப் பார்த்தேன். எனக்கு சிமெண்ட் தொழில் உள்ளது. மறுசீரமைப்புக்கான பொருட்களுடன் நான் உதவ முடியும்.
என்னால் பெயிண்ட் தர முடியும்.
மூல சிலைகள் திருடப்பட்டு நீண்ட நாட்களாகி விட்டன. யுவா பிரிகேட் புதிய சிலைகளை நிறுவி, சேதமடைந்த சுவர்களை சரிசெய்து, பல மாத கடின உழைப்புக்குப் பிறகு, வீரபத்ரசுவாமி கோயில் மீண்டும் சுத்தமாகவும் அழகாகவும் ஆனது.
அதே ஆண்டின் பிற்பகுதியில், மன் கி பாத் நிகழ்ச்சியில் பிரதமரால் குழு பாராட்டப்பட்டது.
இந்திய இளைஞர்களைப் பார்க்கும்போது, நான் மகிழ்ச்சியாகவும், உறுதியுடனும் உணர்கிறேன், ஏனென்றால் அவர்களிடம் 'முடியும்' அணுகுமுறையும் 'செய்வேன்' என்ற எண்ணமும் அவர்களிடம் உள்ளது. எந்த சவாலும் அவர்களுக்கு பெரியது அல்ல. எதுவும் கைக்கு எட்டாமல் இல்லை.



# மன் கி பாத்

## பகுதி. 11

பிரதமர் மோடியின் வானொலி நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்ட மன் கி பாத்தின் பதினொன்றாவது பகுதி, விருப்பம் இருக்கும் இடத்தில் ஒரு வழி இருக்கிறது என்பதை நிரூபிக்கிறது.

தைதாரி நாயக் ஒரு கிராமத்தில் வாழ்ந்தார், அங்கு நிலம் வறண்டு, பயிர்கள் அழிந்து கொண்டிருந்தன, மலைகளுக்குப் பின்னால் இருந்து தண்ணீர் கொட்டும் சத்தம் எப்போதும் கேட்டது ஆனால், பார்த்ததில்லை. ஒரு அதிர்ஷ்டமான காலை, அவர் ஒரு இரும்பு கம்பி, ஒரு மண்வெட்டி மற்றும் சரித்திரம் படைக்கும் விருப்பத்துடன் புறப்பட்டார். பல வருட உழைப்புக்குப் பிறகு, உயிர் நீர் நிரம்பிய கால்வாய் இதற்குச் சான்றாக நிற்கிறது.

சோனாலி ஹெல்வி வறுமையின் சுமையில் பெரிய கனவுகளுடன் பிறந்தார். ரிப்போர்ட் கார்டுகளையும் நுழைவுத் தேர்வுகளையும் மட்டுமே வெற்றிக்கான பாதையாகக் கருதிய ஒரு குடும்பத்தால் கபடி மீதான அவரது ஆர்வத்தை ஊக்கப்படுத்தியது. ஆனால், சோனாலியின் விருப்பம் உறுதியாக இருந்தது. பல ஆண்டுகளாக, அது பல போட்டிகளை பதக்கங்களாக மாற்றியது, சந்தேகம் கொண்டவர்கள் ஆதரவாளர்களாக!

ஸ்ரீபதி துடு தனது தாய்மொழியான சந்தாலிக்கு சேவை செய்வதில் தனது வாழ்நாளைக் கழித்தவர். இந்திய அரசியலமைப்பு இந்த பழங்குடி மொழியில் இல்லை என்று அவர் கண்டுபிடித்ததும், அவரது விருப்பம் எழுந்தது. கடினமான மொழிபெயர்ப்பின் மாதங்களில் அது அவருக்கு ஆதரவாக நின்று, சந்தால் மக்களுக்கு அவர்களின் உரிமைகள் பற்றிய அறிவைக் கொண்டு வந்தது.

பதினொரு எழுச்சியூட்டும் கதைகளின் தொகுப்பு, முயற்சி செய்வதற்கான விருப்பத்தைப் பற்றியது, அது மட்டுமின்றி இது வெற்றிக்கான வழியைப் பற்றியதும்தான்.



₹99

www.amarchitrakatha.com
ISBN 978-93-6127-315-5